மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி
அ.வ.எண்.188/2024
வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் வா.சா.1.
----

| | |
|---|---|
| பெயர் | – திரு. கோபால்சாமி |
| த/பெ. | – திரு. பெருமாள் |
| கிராமம் | – தீத்தாம்பட்டி |
| தொழில் | – |
| தாலுகா | – கோவில்பட்டி |
| வயது | – 72 |

1872–ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 03–ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை.</u>–

1) நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை வாதி தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | எனது பெயரில் ஏற்பட்ட கடம்பூர் சார்பதிவக கிரைய ஆவண எண்.197/1978 ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 2 | 07.05.1984ம் தேதிய வெள்ளைச்சாமி பெயரில் உள்ள கடம்பூர் சார்பதிவக கிரைய ஆவண எண்.230/1984 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 3 | 13.02.2012ம் தேதிய பிரதிவாதி பெயரில் உள்ள கடம்பூர் சார்பதிவக கிரைய ஆவண எண்.193/2012 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 4 | நான் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு ரசீது **வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 5 | காவல்நிலையத்தில் முடிக்கப்பட்டதற்கான இணையதள பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சுருக்கெழுத்தரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.